பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(22.07.2023 முதல் 26.07.2023 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 58 (07) PJN/GKMS/2023 தேதி: 21.07.2023

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (16.07.2023 முதல் 20.2023 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -26.07.2023 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16/07 | 17/07 | 18/07 | 19/07 | 20/07 | | நாள்-1 22/07 | நாள்-2 23/07 | நாள்-3 24/07 | நாள்-4 25/07 | நாள்-5 26/07 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 3 | 5 | 3 |
| 38 | 37 | 37 | 37 | 38 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 37 | 37 | 35 | 34 | 35 |
| 27 | 27 | 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 28 | 28 | 26 | 25 | 25 |
| 4 | 4 | 4 | 4 | 4 | மேக மூட்டம் | 4 | 4 | 5 | 6 | 5 |
| 48-74 | 46-76 | 47-74 | 50-74 | 40-68 | ஈரப்பதம் (%) | 55-70 | 55-70 | 60-70 | 70-80 | 55-70 |
| 6 | 5 | 7 | 8 | 9 | காற்றின் வேகம் (கி.மீ) | 20 | 20 | 20 | 20 | 20 |
| மேற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு | மேற்கு தென் மேற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (22.07.2023 முதல் 26.07.2023 வரை):**

- ஜூலை 24 லிருந்து 26 வரை லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 25-37 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 55-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 20 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- ஜூலை 26 லிருந்து ஆகஸ்ட் 01 வரை மழை (2.82 மி.மீ), அதிகபட்ச வெப்பநிலை (32.36 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (23.93 டி.செ) இயல்பாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | பச்சைப் பாசி | நெல் வயலில் பச்சைப் பாசியைக் கட்டுப்படுத்த மயில் துத்தநாகத்தை (Copper Sulphate) 1000 கிராம் என்ற அளவில் காடா துணியில் கட்டி நெல் வயலின் வாமடையில் வைக்கவும். |
| | நாற்றங்கால் நடவு வயல் நேரடி சேற்று விதைப்பு | **நெற் பயிரின் நாற்றங்காலில்** களையைக் கட்டுப்படுத்த ஒரு சென்ட்க்கு ஒரு மி.லி. பிஸ்பிரிபாக் சோடியம் (Bispyripac sodium 10 SC) களைக்கொல்லியை விதைத்த 8 நாட்களுக்கு பிறகு பயன்படுத்தவும். |

| | | |
|---|---|---|
| | | **நெற் பயிரின் நடவு வயலில்** களைகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு பிரிட்டிலாக்லோர் 50 EC (Pretilachlor) 800 மி.லி. அல்லது பைரசோஸல்ப்யூரான் ஈதைல் 10 WP (Pyrazosullfuron ethyl) 80 கிராம் **நடவு** நட்ட மூன்று நாட்களுக்கு தெளிக்கவும். **நேரடி சேற்று விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஏக்கருக்கு ட்ரைஃபாமோன் (Triafamone) + ஈத்தாக்சி சல்ஃப்யூரான் (Ethoxysulfuron) 90 கிராம் விதைத்த 12-15 நாட்களில் தெளிக்க வேண்டும். |
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | பருத்தியில் மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்த மீன் எண்ணெய் ரோசின் சோப் @ 25 கிராம் / லிட்டர் அல்லது வேப்பெண்ணெய் 2% (20 மிலி/லிட்டர்) அல்லது வேப்பங்கோட்டைச்சாறு 5% அல்லது புயுப்ரோபிசின் 25 SC @ 2 மிலி/ லிட்டர் அல்லது ப்ரோபெனோபாஸ் 50 EC @ 2 மிலி/ லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| | | பருத்தியில் வாடல் நோயைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட செடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஆரோக்கியமான செடிகளின் வேர் பகுதியினை சுற்றியிலும் ஒரு லிட்டர் நீரில் ஓர் கிராம் கார்பென்டசிம் அல்லது 0.75 கிராம் ட்ரைபிலொக்சிஸ்ட்ரோபின் + டெபுகோணசோல் கலந்த புசணக் கொல்லி கரைசலினால் நன்றாக நனைக்க வேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர்பாய்ச்சுவதை தவிர்க்கவும்.

.

**முதல்வர்**